**தஞ்சாவூர் மாவட்ட காவல் துறை**

## பத்திரிக்கைச் செய்தி

தஞ்சாவூர் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலிருந்து இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 113 –வது பிறந்த நாள்விழா மற்றும் 58 –வது குருபூஜை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள செல்லுவோர் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

- தற்போது நிலவி வரும் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் கட்டுப்படுத்துவதற்காக அரசின் அறிவுரைகளின்படி கு.வி.மு.ச பிரிவு 144-ன் கீழ் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள நிலையில் பொது மக்களின் நலன் கருதி அரசு அறிவித்துள்ள அனைத்து வழிகாட்டுதல்களையும் அனைவரும் கடைபிடிக்க வேண்டும்.

- குருபூஜைக்கு செல்லும் அரசியல் கட்சி தலைவர்கள் / பிரதிநிதிகள் மற்றும் மற்ற அமைப்பினர் (5 நபர்களுக்கு மிகாமல்) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் விண்ணப்பித்து முறையான முன் அனுமதி மற்றும் வாகனத்திற்கான அனுமதி சீட்டையும் பெற்று அரசு அறிவுறுத்தியுள்ள வழிமுறைகளை பின்பற்றி உரிய சமூக இடைவெளியை கடைபிடித்து செல்ல வேண்டும்.

- குருபூஜைக்கு செல்பவர்கள் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களின் வழியே மட்டுமே பயணிக்க வேண்டும்.

- குருபூஜைக்கு செல்வோர் கொரோனா வைரஸ் நோய் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக அரசு அறிவுறுத்தியுள்ள அனைத்து வழிகாட்டுதல்களையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடித்து செல்ல வேண்டும்.

- குருபூஜைக்கு செல்லும் வாகனங்களில் ஆயுதங்கள், கற்கள் மற்றும் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் முதலியவற்றை எடுத்துச்செல்லக்கூடாது.

- குருபூஜைக்கு வாகனங்களில் செல்பவர்கள் வெடிகளை வெடிக்க கூடாது. மேலும் வாகனங்களில் சாதி, மத உணர்வுகளை தூண்டும் வாசகங்கள் அடங்கிய பேனர்களை கட்டி பயணம் செய்யவோ, கோஷங்களை எழுப்பவோ கூடாது.

- குருபூஜைக்கு செல்பவர்கள் பொதுப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வாகனங்களை நிறுத்தவோ, இயக்கவோ கூடாது.